Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Dally மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 06 (21-12-1992) திங்கட்கிழமை ஓசை 307

பல்கலைக்கழக ஆசிரியர்கள் நிர்வாகப் பதவி துறப்பு

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு இருபது விகிதப்படி உயர்வை வழங்க உயர் கல்வி அமைச்சர் ஹமீட் முன்வைத்த திட்டம் திருப்திபடுத்தாத நிலையில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது நிர்வாக பதவிகளை இராஜினாமாச் செய்ய முன்வந்துள்ளனர். அனைத்துப் பல்கலைக்கழகங்களின் மீடாதபதிகள், பிரிவுத் தலைவர்கள், மாணவர் ஆலோசகர்கள், மீடுதிப் பொறுப்பதிகாரிகள் பதவி களையே பல்கலைக்கழக ஆசிரியர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர். வரும் ஜனவரி முதலாம் திகதி இவர்கள் மேற்படி பதவிகளிலிருந்து விலகுவார்கள் என்த் தெரிவிக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

நானாட்டானில் புலிகள் துணிகரத் தாக்கு;

10 இராணுவத்தினர் பலி; பலர் படுகாயம்

16 தொடர் காவலரண்கள் தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]

மன்னார் மாவட்டம் நானாட்டான் இராணுவ முகாமிற்கும் மாதிரிக் கிராமம் இராணுவ முகாமிற்கும் இடையில் அமைந்திருந்த இரண்டு மைல் நீளமான தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தீடீர் தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். சுமார் ஒன்றரை மணி நேரமாக இடம் பெற்ற இம் மோதலில் 16 காவலரண்கள் தாக்கி அழிக்கப்பட்டதோடு பல ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.

இதேவேளை சண்டை இடம்பெற்ற பகுதிகளை நோக்கி உயிலங்குளம், நானாட்டான் மாதிரிக்கிராமம இராணுவ முகாம்களில் இருந்து கவசவாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணுவத்தினர் மீதும் புலிகள் வழி மறித்து தாக்குதல் மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை இடமபெற்ற இம் மோதலில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் விடுதலைப்புலிகள் இத்தீடீர்த் தாக்குதலைத் தொடுத்ததாகத் தெரிய வருகிறது. நானாட்டானுக்கும், மாதிரிக்கிராமத்திற்கும் இடையில் உள்ள இரண்டு மைல் நீளமான பகுதியில் 22 காவலரண்கள் அமைந்திருந்தன.

விடுதலைப் புலிகள் தொடுத்த இத்தீடீர்த் தாக்குதல் பெரும் மோதலாக வெடித்து சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை நீடித்தது. இம்மோதலின் பின் பதினாறு காவலரண்கள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. இதில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர் பலர் காவலரண்களை விட்டு ஓடி விட்டனர்.

இதேவேளை, உயிலங்குளம், நானாட்டான், மாதிரிக்கிராமம் ஆகிய இடங்களில

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆறு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை நானாட்டானில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தீடீர் தாக்குதலின் போது ஆறு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

★ லெப்டினன்ட் தமிழவன் ஈசாக் கதா, நறுவிலிக்குளம், வங்காலை.

★ 2-ம் லெப்டினன்ட் சிறிதரனி சிறிகாந்த் தலைமன்னார் பியர், தலைமன்னார்.

★ லெப்டினன்ட் தமிழவன் ஈசாக் கதா, நறுவிலிக்குளம், வங்காலை.

★ 2-ம் லெப்டினன்ட் சிறிதரனி சிறிகாந்த் தலைமன்னார் பியர், தலைமன்னார்.

★ வீரவேங்கை இசையமுதன் ராசையா மோகன்குமார் சிவபுரம் கிராஞ்சி, மன்னார்.

வீரச்சாவடைந்த இவ் ஆறு

வவுனியா நகரில் தமிழ் சிப்பாய்கள்

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தில் சேர்க்கப்பட்ட தமிழ் இளைஞர்களின் ஒரு தொகுதியினர் வவுனியா நகரில் சேவைக்கு விடப்பட்டுள்ளனராம்.

சமீபத்தில் வவுனியா வேப்பங்குளம் அகதிமுகாமில்வைத்துச் சேர்க்கப்பட்ட தமிழ் இளைஞர்களே அனுராதபுரம் இராணுவ முகாமில் பயிற்சியை முடித்துக்கொண்டுவந்துள்ளனராம்.

இந்த இளைஞர்கள் இராணுவ சீருடையில் வவுனியா நகரில் நடமாடுகின்றனர் என்றும், இவர்களில் சிலர் சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவில் பணிபுரிகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

வவுனியா படையால் லொறிச்சாரதிகைது

உரப்பைகளை ஏற்றி வந்த லொறிக்குள் வாகன உதிரிப் பாகங்களும், பற்றறிகளும் தொகையாக மறைத்துவைத்திருந்ததைக் கண்டு பிடித்த இராணுவத்தினர் லொறிச் சாரதி உட்பட அந்த லொறியில் வந்த அனைவரையும் கைது செய்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா நகரில் பொருள்களை ஏற்றி வந்த லொறி ஒன்றிற்குள்ளேயே இப் பொருள்கள் பெரும் தொகையாகக் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி லொறியை இராணுவத்தினர் தாண்டிக்குளம் வாகன சோதனை முகாம் பகுதியில் சோதனைக்குட்படுத்திய போதே இப் பொருள்கள் இராணுவத்தால் கைப்பற்றப் பட்டன.

26 சிறி 3632 என்ற இலக்கத்தையுடைய இந்த லொறி தற்போது இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

பீரங்கித் தாக்கு

[யாழ்ப்பாணம்]

பூநகரிப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் யாழ் குடாக் கடற்பரப்பின் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரை இவ்வாறு இராணுவத்தினர் தாக்குதல்களை நிகழ்த்தியவண்ணம் இருந்தனர். மேலும் இப் பகுதிகளில் இருந்து கனரக கடற்பரப்புகளை நோக்கியும் பீரங்கித் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டதாக தெரியவருகிறது.

ஆர்ப்பாட்ட அரசியல் செல்வாக்கிழந்தது

– பிரேமதாசா

ஆர்ப்பாட்டங்கள், கண்டனங்கள் என்பவற்றின் மூலம் அரசியல் நடத்தும் ஆர்வம் மக்களிடையே தற்போது செல்வாக்கு இழந்து வருவதாகவும், தனிநபர் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட அரசியல் இப்போது இல்லை என்றும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்

வவுனியா படையால் லொறிச்சாரதிகைது

உரப்பைகளை ஏற்றி வந்த லொறிக்குள் வாகன உதிரிப் பாகங்களும், பற்றரிகளும் தொகையாக மறைத்து வைத்திருந்ததைக் கண்டு பிடித்த இராணுவத்தினர் லொறிச் சாரதி உட்பட இந்த லொறியில் வந்த அனைவரையும் கைது செய்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா நகரில் பொருள்களை ஏற்றி வந்த லொறி ஒன்றிற்குள்ளேயே இப் பொருள்கள் பெரும் தொகையாகக் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி லொறியை இராணுவத்தினர் தாண்டிக்குளம் வாகன சோதனை முகாம் பகுதியில் சோதனைக்குட்படுத்திய போதே இப் பொருள்கள் இராணுவத்தால் கைப்பற்றப் பட்டன.

26 றெஜி 3632 என்ற இலக்கத்தையுடைய இந்த லொறி தற்போது இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இராணுவ சித்திரவதைக்கு இளைஞர் பலி?

வவுனியா இராணுவ தலைமை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் தப்பியோடி விட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் கடந்த 16 ஆம் திகதி தப்பி ஓடியதாகவும் இதனைத் தொடர்ந்து வவுனியா நகர் புறம் முழுவதும் தேடுதல் நடாத்தப்பட்டதாகவும் ஆனால் அவர் கண்டு பிடிக்கப்படவில்லை எனவும் தெரிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த இளைஞர் தப்பி ஓடியிருக்க முடியாது எனவும் இராணுவத்தின் சித்திரவதையினால் அவர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் இதனை மறைக்கவே இராணுவம் இவ்வாறு கூறுவதாகவும் சந்தேகிக்கப்படுகிறது என செய்திகள் தெரிவிக்கின்றன.

ராணுவத்தினரால் பொருள்கள் அபகரிப்பு

நொச்சியோட்டைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பயணிகள் வடபகுதி நோக்கி எடுத்து வரும் பொருள்களை அபகரித்துக் கொள்கின்றனர்.

சிப்பாய்கள் தரத்தில் இப் பகுதியில் குவிந்துள்ள இராணுவத்தினர் பொது மக்களின் பொருள்களை இரண்டாம் தடவையாக சோதனை செய்வதாகக் கூறி பெறுமதி வாய்ந்த பொருள்களை அபகரித்து விடுகின்றனராம்.

சில தினங்களுக்கு முன்னர் லொறி ஒன்றில் வடபகுதி நோக்கி வந்த இருவரிடம் பெறுமதி வாய்ந்த பொருள்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டன. (தி)

மண்ணெய் எடுத்துவர 25 லொறிகளுக்கு அனுமதி

வடபகுதி நோக்கி மண்ணெய் எடுத்துச் செல்வதற்கு 25 லொறிகளுக்கு மட்டும் கூட்டுப்படை தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது. இன்னும் சில தினங்களில் இந்த லொறிகள் மண்ணெய்யுடன் வடபகுதிக்கு வந்து சேரும் என்று தெரிக்கப்பட்டது.

வவுனியா ஈரற்பெரியகுளம் வாகன சோதனை நிலையப் பகுதியில் நாற்றுக்கு மேற்பட்ட லொறிகள் மண்ணெண்ணெய்யுடன் வடபகுதி நோக்கி வருவதற்கு காத்து நிற்கின்றன. இந்த லொறிகளில் இருபத்தைந்துக்குமட்டுமே தற்போது கூட்டுப்படை தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

வடபகுதிக்கு மண்ணெண்ணெய் ஏற்றிவருவதில் நேரிந்த இழுபறி நிலையை அடுத்து வடபகுதியெங்கும் இதன் விலை அதிகரித்திருக்கின்றமை தெரிந்ததே. தெற்கிலிருந்து மண்ணெண்ணெய் லொறி வருவதை அடுத்து இதன் விலை மீண்டும் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (தி)

ஆறு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை நானாட்டானில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலின் போது ஆறு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

★ கப்டன் வாசுதேவன் (ஜோய்) ஐயம்பெருமாள் செல்வக்குமார், ஸ்ரேசன் வீதி, மன்னார்.

★ லெப்டினன்ட் சச்சு அன்ரனி சிறிகாந்த், தலைமன்னார் பியர், தலைமன்னார்.

★ லெப்டினன்ட் தமிழவன் ஈசாக் சுதா, நறுவிலிக்குளம், வங்காலை.

★ 2-ம் லெப்டினன்ட் சிறிகாந்தன் அந்தோனிமுத்து வரதராசன் ஏபிரியகுஞ்சுக்குளம், மன்னார்.

★ 2-ம் லெப்டினன்ட் தங்கள் அழகையா ஜயாத்துரை மடு மூர் முனை, ஒந்தாச்சிமடம், மட்டக்களப்பு.

★ வீரவேங்கை இசையமுதன் ராசையா மோகன்குமார், சிவபுரம், கிராஞ்சி, மன்னார்.

வீரச்சாவடைந்த இவ் ஆறு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நானாட்டானில் நேற்று அதிகாலை இடம் பெற்ற தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் இராணுவத்தினரிடம் இருந்து பல ரக ஆயுதங்களைக் கைப்பற்றினர். அவற்றின் விபரம் வருமாறு:

★ ஆர். பி. ஜி	— 01
★ ஆர். பி. ஜி ஷெல்	— 05
★ ஆர். பி. புறப்பளர்	— 04
★ 40 மி. மீ பிஸ்டல்	— 01
★ 40 மி. மீ ஷெல்	— 12
★ ஏ. கே. எல். எம். ஜி	— 01
★ ஏ. கே. எல். எம். ஜி ரம் மகசின்	— 01
★ ரி 56-2 ரக துப்பாக்கி	— 03
★ ரி 56-1 ரக துப்பாக்கி	— 02
★ ரி 56 புதிய ரக துப்பாக்கி	— 02
★ நடுத்தர ரவைகள	— 3775
★ ஏ கே. எல். எம். ஜி லிங்	— 275
★ நேட்டோ ரவைகள	— 80
★ ஏ கே மகசின்	— 24
★ ஜி 3 மகசின்	— 04
★ தலைக்கவசம்	— 05
★ ஏ. கே. கோல்சர்	— 04
★ குண்டு துளைக்காத அங்கி	— 01
★ மழை அங்கி	— 05
★ சப்பாத்து (சோடி)	— 04
★ தண்ணீர்க்கான்	— 03
★ தண்ணீர்க்கான் கோல்சர்	— 01
★ கிட்பாக்	— 04
★ இராணுவப் பட்டி	— 02
★ வயர் றோல்	— 01

உசார் நிலையில் இருக்க படையினருக்கு உத்தரவு

[கொழும்பு]

வடக்கில் படைகளை உசார் நிலையில் இருக்குமாறு சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் பணித்துள்ளனர். புலிகள் வடக்கிலுள்ள முன்னணிப் பாதுகாப்பு நிலையங்களின் மீது தாக்குதல் நடத்தலாம் என்பதைத் தாம் தட்டிக்கழிக்கவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தணிந்து இருக்கும்படியும், படைகள் தாக்குதல் மேற்கொண்டால் திருப்பித் தாக்கும்படி புலிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகத் தமக்குப் புலனாய்வு அறிக்கை கிடைத்திருப்பதாகவும் வட்டாரங்கள் கூறுகின்றன.

மௌனத்துக்குப் பிறகு புலிகள் திடீர்தாக்குதலை நடத்தும் பழக்கம் உள்ளவர்கள். அவர்கள் நடவடிக்கையை நம்பமுடியாது என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி ஐலன்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகள் கிழக்கில் தாக்குதலை நடத்தலாம் என்று புலனாய்வு அறிக்கை கூறுவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்காகப் புலிகளின் எண்ணிக்கை கிழக்கில் அதிகரிக்கப் பட்டிருப்பதாக இராணுவ தரப்பில் கூறப்படுகிறது.

திருமலையில் கடற்படை படகை காணவில்லை

(கொழும்பு)

அண்மையில் கிழக்கில் பெரும் மழை பெய்தபோது திருக்கோணமலை கடலில்பயணம் செய்த கடற்படைப் படகு ஒன்று காணாமல் போயிருப்பதாகவும், அப் படகை தேடும் பணியில்கடற் படையினரும், விமானப்படையினரும் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. கிண்ணியாவிலிருந்து திருக்கோணமலை நோக்கி இப்படகு வந்து கொண்டிருந்த போது கடற் படையைச் சேர்ந்த மூவரும், (4 ஆம் பக்கம் பார்க்க)

நேற்று அதிகாலை இடம்பெற்ற இம் மோதலில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் விடுதலைப்புலிகள் இத்திடீர்த் தாக்குதலைத் தொடுத்ததாகத் தெரிய வருகிறது நானாட்டானுக்கும், மாதிரிக்கிராமத்திற்கும் இடையில் உள்ள இரண்டு மைல் நீளமான பகுதியில் 22 காவலரண்கள் அமைத்திருந்தன.

விடுதலைப் புலிகள் தொடுத்த இத்திடீர்த் தாக்குதல் பெரும் மோதலாக வெடித்து சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை நீடித்தது. இம்மோதலின் பின் பதினாறு காவலரண்கள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. இதில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பலர் காவலரண்களை விட்டு ஓடி விட்டனர்.

இதேவேளை, உயிரிழப்புகளும், நானாட்டான், மாதிரிக்கிராமம் ஆகிய இடங்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மேலும் இப் பகுதிகளில் இருந்து வெளி கடற்பரப்புகளை நோக்கியும் பீரங்கித் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டதாக தெரியவருகிறது.

ஆர்ப்பாட்ட அரசியல் செல்வாக்கிழந்தது

- பிரேமதாசா

ஆர்ப்பாட்டங்கள், கண்டனங்கள் என்பவற்றின் மூலம் அரசியல் நடத்தும் ஆர்வம் மக்களிடையே தற்போது செல்வாக்கு இழந்து வருவதாகவும், தனிநபர் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட அரசியல் இப்போது இலை என்றும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க. யின் 38-வது வருடாந்த மாநாட்டை முன்னிட்டு கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், கட்சி என்ற வகையிலும், அரசாங்கம் என்ற வகையிலும் ஐ. தே. க. ஒருமைப்பாட்டை வளர்க்கும் முறையைக் கடைப்பிடித்து வருவதாகவும் தெரிவித்தார்.

'திரிசங்கு' சொர்க்கத்தில் முன்னாள் அமைச்சர் ரொனி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்தோ அல்லது சுதந்திரக் கட்சியிடமிருந்து அழைப்புக் கிடைக்காது நிலையில் ரொனி டி மெல் தனது அரசியல் எதிர்காலம்குறித்து சிந்தித்துவருவதாகப் பி. பி. ஸி நேற்றுத் தெரிவித்தது.

தான் எண்ணிவந்தது நிறைவேறாவிட்டால் மார்ச் மாதமளவில் லண்டன் திரும்பப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியில் ரொனிடி மெல்லை இணைத்துக்கொள்ள கட்சியின் தலைமைப்பீடம் தயங்குகின்றது; தேர்தலை எதிர்நோக்கும் ஆத்திருணத்தில்ரொனியஇணைத்துக்கொள்வதன் மூலம் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

பொலிஸாருக்கும் ரி-56 ரக துப்பாக்கி

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் பயிற்சியினருக்கு ரி-56ரகத்துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இப்போது பாவனையிலிருக்கும் 303மற்றும் ஜி 3 துப்பாக்கிகளுக்குப் பதிலாகவே ரி-56 ரகத் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கிடையில் முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரால் சிபார்சு செய்யப்பட்ட நவீன தொடர்புச் சாதனங்களும் ஒழுங்கப்படவுள்ளன. இவை வெளிநாடு ஒன்றிலிருந்து தருவிக்கப்படவுள்ளதாம்.

மேலும் வடபகுதியில் உள்ள படையினருக்கு ஆயுதங்களும், ரவைகளும்மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளதாகச் சிறிலங்கா பாதுகாப்புப்படைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகள் மீது தடையுத்தரவு; சரியானதெனத் தீர்ப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதுவிதிக்கப்பட்ட தடை உத்தரவு சரியானதே என்று நடுவர்மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விடுதலைப் புலிகள் சட்டவிரோத அமைப்பு என்று பிரகடனம் செய்வதற்கு போதுமான அடிப்படை ஆதாரங்கள் உள்ளதா என்பதைப் பரிசீலனை செய்ய புதுடில்லி நீதி மன்றத்தின் நீதிபதி ஒருவர் தலைமையில் மத்திய அரசினால் அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் இந்த தீர்ப்பை அளித்துள்ளது.

1967 ஆம் ஆண்டில் தேச விரோத நடவடிக்கை தடுப்பு சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது 1992

(4 ஆம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றரிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அண்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (பி-5588)

கலண்டர் விற்பனைக்கு

அழகிய முறையில் கலண்டர்கள் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள ஸ்ரீலங்கா அச்சகம் (அச்சக வீதி). மலிவு விலையில் கலண்டர்கள் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீசாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3800)

விற்பனைக்கு

இறைச்சிக்கோழிவிற்பனைக்குண்டு (புறோய்லர்) தொடர்புகொள்ளவேண்டியமுகவரி: பாலன் (மோட்டார் சயிக்கிள் திருத்துமிடம்) திக்கம் வடிசாலைக்கு முன்பு, திக்கம். (3409)

தேவை

பாவிக்கப்பட்ட அல்லது புதிதான ரியூப் லைற்கள் உடன் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: பாலன் (மோட்டார் சயிக்கிள் திருத்தும் இடம்), திக்கம் வடிசாலைக்கு முன்பு, திக்கம். (3408)

அராலியூரின் நூல்கள்

அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாசித்தால் நீங்கள் எந்த வானொலி நிலையத்திற்கும் நாடகங்கள் எழுதலாம். 1. பொலிடோலேகதி, 2. பணமோபணம்மேடை நாடகங்கள், 3. கெட்டிக்காரர்கள், 4. முதலாம்பிள்ளை 30/- வானொலி நாடகங்கள். (3751)

45 பேருக்கு விவசாயக்கடன்

(வடமராட்சி)

வடமராட்சி விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக 45 விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

வடமராட்சி விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 45 விவசாயிகளுக்கு 1 இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமராட்சி விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் திரு. சிவபாதசுந்தரம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

போராட்டத்திலிருந்து எவரும் விலகி நிற்க முடியாது

- யோகி

"நாங்கள் இந்தப் போராட்டத்தினின்றும் விலகி நிற்கமுடியாது. இந்தப் போராட்டத்தினின்றும் ஓட முடியாது இந்த மாவீரர்களை நினைவு கூருகின்ற நினைவு நாட்களிலெல்லாம் நாங்கள் அவர்கள் கண்ட கனவை-இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்றுஉறுதி எடுத்துக்கொள்வோம். இந்த மண்ணிலே நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். நாளை இந்த மண்ணிலே நாங்கள் விடுதலை பெற்ற மனிதர்களாக உலகத்திற்கு வழிகாட்டுகின்ற ஒரு நாட்டை அமைக்கும் மனிதர்களாக வாழ்வோம்"

மன்னார் மாவட்டத்தில் முதன்முதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் நிதிதரன் அவர்களது 8ஆவது ஆண்டு நினைவாக நடாத்தப்பட்ட நினைவுஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. தேவர் அவர்களின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இரவு 7-30 மணியளவில் நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் இந்நினைவுஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டது.

வீரவேங்கை அல்போன்சின் தாயார் குத்துவிளக்கேற்றி இந்நிகழ்வினை ஆரம்பித்து வைக்க, லெப்டினன்ட் கேணல் விக்ரரின் தந்தையார் திரு. மருசலின் அவர்கள், லெப்டினன்ட் நிதி அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

தமிழீழ மாவீரர் பணி மனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி வெண்ணிலா, விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் திரு. குரு, கவிஞர் வாஞ்சிநாதன் ஆகியோரும் உரையாற்றிய இவ் நினைவுஞ்சலிக் கூட்டத்தினைவிடுதலைப்புலிகள் இயக்க மன்னார் தொடர்பகத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

பரீட்சைக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு நன்றி

- கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சா/த) பரீட்சைகள் நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் யாழ்ப்பாண பிராந்திய கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் நன்றி தெரிவித்துள்ளார்.

அசாதாரண சூழ்நிலையின் கீழும் பரீட்சை மண்டபங்களை நிர்வகித்த ஆளணியினருக்கும் கல்வியில் நாட்டம் கொண்ட சகலருக்கும், கரவெட்டி துறையினருக்கும். இந்த மாவட்டத்தில் வெளிவரும் பத்திரிகைகளுக்கும், போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு செய்தோருக்கும், யாழ் மாவட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர் சார்பிலும் தமது நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

'மலத்தியோன்' எடுத்துவர 'போரூட்' முயற்சி

(யாழ்ப்பாணம்)

'மலத்தியோன்' பவுடரை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ள 'போரூட்' நிறுவனம் முன்வந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக இம்மலத்தியோனைக் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவர கப்பல் அதிகாரிகள் மறுத்துவந்தது தெரிந்ததே.

தற்போது 125 பெட்டி மலத்தியோனைத்தரைமார்க்கமாக இங்கு எடுத்து வருவதற்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருமாறு 'போரூட்' அதிகாரிகளிடம் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளதைத் தொடர்ந்தே அவ் அதிகாரிகள் இதனை எடுத்துவர உறுதியளித்துள்ளனர். (ப)

மாமரச் செய்கை

திரிநொச்சித் தோட்டம் (மாதகல்)

மாதகல் திரிநொச்சித் தோட்டத்தில் மாமரச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாதகல் திரிநொச்சித் தோட்டத்தில் 1000 மாமரங்களை நாட்டி மாமரச் செய்கையை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

மாதகல் திரிநொச்சித் தோட்டத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தோட்டத்தின் முகாமையாளர் திரு. சிவபாதசுந்தரம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இ. தொ. காவின் தலைமை வங்குரோத்தாகியுள்ளது

வெளியேறியோர் அறிக்கை

(தொடர்ச்சி)

தொழிலாளர் காங்கிரஸிலிருந்து நாங்கள் விலகுவதன் மூலம் இ.தொ.கா. தலைமைத்துவம் வங்குரோத்தாகியிருப்பதும், அது பின்பற்றும் தனிமைப்படுத்தும் கொள்கைகளும் தவறானவை என்பதும் அம்பலமாகிறது. எனவே தேர்ட்டத் தொழிலாளர்களின் ஒளிமிக்க எதிர்காலத்திற்காக இ.தொ.கா.வில் இருந்து விலகி எமது வழியைப் பின்பற்றுங்கள் என்று கூறும் அறிக்கையொன்றை இ.தொ.காவிலிருந்து வெளியேறியுள்ள சிலர் விடுத்துள்ளனர்.

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தோட்டத் தொழிலாளர்கள் எப்போதும் தொழிலாளர்களாகவே இருக்க வேண்டுமென்றும் இ.தொ.கா தலைமை விரும்புவதாகவும், இரண்டு அல்லது மூன்று குடும்பங்களைச் சேர்ந்தோரி மட்டுமே தொழிலாளர்கள் என்ன செய்யவேண்டும் அல்லது என்ன செய்யக்கூடாது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் மிகவும்வர்களாக இருப்பதாகவும், சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதிதுடன் இ.தொ.கா. தலைமையானது தனது சொந்த அரசியல் அபிலாசைகளை ஈட்டுவதற்காக தொழிலாளர்களின் நலன்களைபணயம்வைப்பதாகவும், இந்திய வம்சாவழியினரை தேசியநீரோட்டத்தில் கலந்து கொள்வதை தடுத்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இ.தொ.கா. தலைமையின் கீழ் ஜனநாயகம் இல்லை என்றும், சர்வாதிகாரமே இருப்பதாகவும் திரு. செல்லத்துரை குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த அறிக்கையில், கே. விஸ்வானந்த ராஜா (இளைஞர் காங்கிரஸின் முன்னாள் தலைவர்) வி. இராமையா (தொழிலுறவு அதிகாரி), எஸ். மைக்கல் (பிராந்திய அமைப்பாளர்), கே. செல்லத்துரை (டைரக்டர்) சுகுணேஸ்வரன் (அமைப்பாளர்) வி. பி. முத்தையா (பிராந்திய தலைவர், கண்டி), கே. ரட்ணம் (பிராந்திய தலைவர், ராகலை) திருமதி சரஸ்வதி ஜெயராஜ் (இணைப்பாளர் மகளிர் காங்கிரஸ்) செல்வி தமிழ்மணி ராஜகுமார் (பிராந்திய பிரதி நிதி. மாத்தளை) டபிள்யூ. ரத்தினம் (மத்திய மாகாண சபை உறுப்பினர்) ஆகியோர் உட்பட்டபிராந்திய தலைவர்களான மேலும் பத்துப் பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

தங்கச்சங்கிலி அணிந்துவரதடை

(வவுனியா)

கழுத்தில் சங்கிலி அணிந்து வருவதோ அல்லது கொண்டு வரப்படுவதோ இராணுவத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து வவுனியா இராணுவ சோதனை நிலையம் ஊடாக ஆணோ, அல்லது பெண்ணோ தங்கத்தினாலான சங்கிலி கொண்டு வருவதை இராணுவம் தடை செய்துள்ளது

18ஆம் திகதி முதல் இத்தடை நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

முத்திரைக்கு சீனி மானியோகம்

மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைத்தாழ்வழங்கும் சீனியை இன்று முதல் வியாழன்தோறும் வரை பெற்றுக் கொள்ளலாம் என்று கட்டவேலி, நெல்லியடி ப.நோ. கூட்டுறவுச் சங்கம் கூறியுள்ளது. இதனை பெற வருபவர்கள் தத்தமது குடும்ப அட்டைகளை கொண்டு வர வேண்டுமெனவும், பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அச் செய்தி குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

கண்டெடுப்பு

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் பெறுமதிமிக்க தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவின் யாழ். மாவட்ட வருவாய் பகுதி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. உரியவர்கள் சந்தர்ப்பத்தில் இருக்கும் மேற்படி பிரிவின் அலுவலகத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டகை அமைப்பு

(வடமராட்சி)

அல்வாய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஏற்பட்டு வரும் இட நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 100 மாணவர்கள் கல்வி கற்கக் கூடிய வகையில் கொட்டகை ஒன்றை அமைக்க முன்வந்துள்ளது. (யோ

நினைவு கூருகின்றோம்...

1992-12-21

1984-ம் ஆண்டு இதே தினத்தில் கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டதுப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

★ சோ. (சோமசுந்தரம் பாலச்சந்திரன்-கட்டைபறிச்சான்-மூதூர், திருக்கோணமலை)

★பழம்/கதிரவன் (க. தவராசா-சம்பூர், மூதூர்-திருக்கோணமலை)

1985-ம் ஆண்டு, சுதுமலைப்பகுதியில் எமது முகாமொன்றை, உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்காப்படையினர் சுற்றி வளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

மேஜர் அல்பேட் (சந்தையா ரூபதிதி-ரூபதிதிவீதி, அச்சுவேலி தெற்கு-யாழ்.)

1987-ம் ஆண்டு புலியங்கூடல் அம்மன் கோயிலடிப் பகுதியில், இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

அல்ஸ் (க.ரவீந்திரன்-புலியங்கூடல், ஊர்காவற்றுறை, தீவகம்-யாழ்.)

லெப்.சாந்தன் (மா.செல்ஸ்ரின் தேவராஜ்—11-ம் வட்டாரம், நெடுந்தீவு, தீவகம்-யாழ்.)

கொழும்பு-வெள்ளவத்தைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

நாகரட்ணம் சிவசங்கர் (தெல்லிப்பழை-யாழ்)

1988-ம் ஆண்டு மலையகம்-அப்புத்தளைப்பகுதியில் ஜே.வி.பி. இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3-தமிழ் இளைஞர்கள்

1990-ம் ஆண்டு, மன்னார்-கொண்டச்சிப் பகுதியில் சென்ற சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். ஜோதிரவி (பொன்னுச்சாமி சந்திரவேல்-இலக்கந்தைக்குளம், நானாட்டான்-மன்னார்)

சங்கிலியன் (சவரிப்பிள்ளை சகாயராசா-(மொரிஸ்) பள்ளக்கோட்டை, நானாட்டான்-மன்னார்)

மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

வேந்தன் (ஆடைக்கலம் முத்துக்குமார்- உடையார்கட்டு, முல்லைத்தீவு)

நானாட்டானில் வீரச்சாவெய்தியோர்

சாலைக்கு முன்பு, திக்கம். (3408)

அராலியூரின் நூல்கள்

அராலியூர் கந்தரம்பிள்ளையின்நாடகங்களைவாசித்தால் நீங்கள் எந்த வானொலிநிலையத்திற்கும் நாடகங்கள் எழுதலாம். 1. பொலிடோவேகதி, 2. பணமோபணம்மேடை நாடகங்கள், 3. கெட்டிக்காரர்கள், 4. முதலாம்பிள்ளை 30/- வானொலி நாடகங்கள். (3751)

45 பேருக்கு விவசாயக்கடன்

(வடமராட்சி)

புலோலி மேற்கு விவசாயிகள் சங்கம் 45 விவசாயிகளுக்கு விவசாயக் கடன் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இச் சங்கத்தில் நீண்ட காலம் உறுப்பினர்களாக இருந்து வரும் மேற்குறித்த விவசாயிகளுக்கு காலபோக வெண்காயச் செய்கைக்கென சுமார் 7 இலட்சம் ரூபாவை பருதித்துறை இலங்கை வங்கி வழங்க முன்வந்துள்ளது.

(யோ)

அலங்கார உற்சவம்

கரவெட்டி வேதவனப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் முப்பதாம் திகதி புதன் கிழமையன்று திருவெம்பாவையுடன் ஆரம்பமாகிறது. ஜனவரி 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்த திருவிழாவும் நடைபெற உள்ளது. இத் திருவிழாவை முன்னிட்டு உற்சவ காலங்களில் விசேட சொற்பொழிவும், உபந்நியாசங்களும் நடத்தப்பட இருப்பதாக தெரிய வருகிறது.

ஓய்வூதியம் கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர்களான டிசம்பர் மாத கொடுப்பனவு இன்று திங்கட்கிழமை தொடக்கம் யாழ் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படும் என அதன் முகாமையாளர் திரு. து. வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

'போரூட்' முயற்சி

(யாழ்ப்பாணம்)

'மலத்தியோன்' பவுடரை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ள 'போரூட்' நிறுவனம் முன்வந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக இம்மலதியோனைக் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவர கப்பல் அதிகாரிகள் மறுத்துவந்தது தெரிந்ததே.

தற்போது 125 பெட்டி மலத்தியோனைத்தரைமார்க்கமாக

மாமரச் செய்கை

கிளிநொச்சிக் கோட்டம் இராமநாதபுரம் பகுதியில் மாமரச்செய்கைத்திட்டமொன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சூழலைப் பாதுகாப்பதில் மரங்களின் இன்றியமையாத தேவையும் விறகுத் தேவைக்காக வன்னிப்பகுதியில் அதிகளவில் மரங்கள் தறிக்கப்படுவதனால் தறிக்கப்படும் மரங்களின் எண்ணிக்கையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தையேனும் ஈடுசெய்யும் நோக்கத்துடனும் வருமானச்சத்துள்ள பழ மரங்களை உற்பத்திசெய்யவும் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

'இ' அட்டைகள் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட 'இ' அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன. எனவே 1992 மார்கழி மாத இரண்டு கட்ட நிவாரணப் பொருள்களை வழங்கி விட்டு மக்களிடமிருந்து மேற்படி அட்டைகளைப் பெற்று தனது பணிமனையில் சமர்ப்பிக்குமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் தனது நிர்வாகத்திற்குட்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். மீளாய்வு செய்யப்பட்ட அட்டைகளுக்கு "மீளாய்வு செய்யப்பட்டது" என்ற அச்சு பொறிக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் இத்தகைய அட்டைகளுக்கு மாத்திரமே வருங்காலத்தில் இலவச உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படல் வேண்டும் என்றும் அனர் கேட்டுள்ளார்.

முயற்சி

இங்கு எடுத்து வருவதற்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருமாறு 'போரூட்' அதிகாரிகளிடம் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளதைத் தொடர்ந்தே அவ் அதிகாரிகள் இதனை எடுத்து வர உறுதியளித்துள்ளனர். (ப)

தால் தடை செய்யப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து வவுனியா இராணுவ சேதனை நிலையம் ஊடாக ஆனை, அல்லது பெண்ணோ தங்கத்தினாலான சங்கிலி கொண்டு வருவதை இராணுவம் தடை செய்துள்ளது

18ஆம் திகதி முதல் இத் தடை நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(தி)

கண்டெடுப்பு

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் பெறுமதிமிக்க தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவின் யாழ். மாவட்ட வருவாய் பகுதி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. உரியவர்கள் கந்தரமடத்தில் இருக்கும் மேற்படி பிரிவின் அலுவலகத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நானாட்டானில் வீரச்சாவடைந்தோர்

கப். வாசுதேவன் (ஜோய்)

லெப். சச்சு

லெப். தமிழவன்

2-ம் லெப். சிறிக்காந்தன்

2-ம் லெப்.தங்கன்

வீர வேங்கை இசையமுதன்

நாகரட்ணம் சிவசங்கர் (தெல்லிப்பழை-யாழ்)

1988-ம் ஆண்டு மலையகம்-அப்புத்தளைப்பகுதியில் ஜே.வி.பி இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3-தமிழ் இளைஞர்கள்

1990-ம் ஆண்டு, மன்னார்-கொண்டச்சிப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். ஜோதிரவி (பொன்னுச்சாமி சத்திவேல்-இலக்கந்தைக்குளம், நானாட்டான்- மன்னார்)

சங்கிலியன் (சவரிப்பிள்ளை சகாயராசா - (மொரிஸ்) பள்ளக்கோட்டை, நானாட்டான்-மன்னார்)

மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

வேந்தன் (அடைக்கலம் முத்துக்குமார்- உடையார் கட்டு- முல்லைத்தீவு)

வில்பத்துக்காடு- மருதமடுப்பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். சசி (இராசமணி குபேந்திரன்- சேத்துக்குளம், மாந்தை - மன்னார்)

கட்டுவன் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

சரிதா (ஜோதிலட்சுமி ராஜையா - செம்மலை, ஆலம்பில் - மணலாறு)

கொக்குத் தொடுவாய்ப்பகுதியில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த-

சிகரோ (சிவலிங்கம் தெய்வேந்திரன்- கிராஞ்சி - மட்டக்களப்பு)

கரம்பனில் சிறிலங்கா இராணுவத்தினரால் பதித்தெடுக்கப்பட்ட அவரது காணியாலேயே வெட்டிக்கொல்லப்பட்ட சிவற்றொழிலாளியான தமிழர்.

அம்பாறையில் சிறிலங்கா வான்காவற் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு- ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1991-ம் ஆண்டு திருக்கோணமலை- தோப்பூர், பட்டிமேட்டுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மேஜர் மணி (பொன்னையா சங்கரலிங்கம்- சம்பூர், மூதூர்- திருக்கோணமலை)

திருமலை- ராவடிச்சோலையில் இராணுவத்தாக்குதல் செய்யப்பட்டு முகாமில் கடும் சித்திரவதையின்பின் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/5615)

சிந்தனைக்கு

கட்சிக்கொடிகளின் நிழலில்தான் பெரும்பாலும் நாட்டுப்பற்று புதைக்கப்படுகின்றது.
—ஜேக்-ஹென்ரி லெயின்ட் பியேர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 21-12-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் -05

1993 தேர்தல் ஆண்டு?

சிறிலங்காவில் அடுத்த ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாக இருக்கலாம் என ஆருடம் தெரிவிக்கப்படுகின்றது. இதில், மாகாணசபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல் எது வேண்டுமானாலும் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டெனவும் குறிப்பாக மாகாண சபைத் தேர்தல்கள் பெரும்பாலும் நடைபெற்றே ஆகும் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அடுத்த வருடம் ஒரு தேர்தல் ஆண்டாகவே இருக்கும் என இவ்வருடத்தின் ஆரம்பத்திலேயே தெரிவிக்கப்பட்டுவந்தது. ஆனால், வேறோர் அரசியல் சூழ்நிலையில் நடத்த சிறிலங்கா ஜனாதிபதி திட்டமிட்டிருந்த இத்தேர்தல்கள் தற்பொழுது வேறோர் சூழ் நிலையில் நடத்தப்பட வுள்ளது போல் உள்ளது இவ்வருடம் ஆரம்பிக்கும் முன்னரே இவ்வருடத்திற்குள் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக ஒடுக்கப்படுவார்கள், பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் ஓர் குறைந்த பட்ச தீர்வுத்திட்டத்தை முன்வைத்து; இனப்பிரச்சினையைத் தீர்த்து வைத்த 'தேசியத் தலைவர்' என்ற பெயருடன் தேர்தலை எதிர்கொள்ளலாம் என்றே திரு. பிரேமதாசா திட்டமிட்டிருந்தார். இதனால் போருக்கான காலக் கெடுவையும், அரசியல் தீர்விற்கான காலக் கெடுவையும் அரசாங்கம் விதித்திருந்தது. ஆனால், அவர் எதிர்பார்த்த மாதிரிவடக்கு கிழக்குப்போர் அவருக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை.

மாறாக, தெற்கில் அரசியல் சூழ்நிலை, திரு. பிரேமதாசாவிற்கு கடந்த வருடத்தை விட இவ்வருடத்தில் பெரும் சாதகமான நிலையில் உள்ளது. கடந்த வருடம், பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட குற்றவிசாரணை கோரும் பிரேரணையும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் திரு. பிரேமதாசாவிற்கு எதிரான ஓர் அரசியல் சூழ்நிலையை உருவாக்கியிருந்தது.

தமிழகத்தில் இராணுவம் குவிப்பு! அ.இ.அ.தி.மு.க. அரசு அதிர்ச்சி!!

தூதுக்குழு டில்லி விரைவு

(சென்னை)

தமிழ்நாட்டில் இந்திய இராணுவ அணிகள் குவிக்கப்பட்டிருப்பதாகவும், இது குறித்து தமிழக அரசு ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது. இதைத்தொடர்ந்து மாநில அமைச்சர்களான அரங்கநாயகம், கண்ணப்பன் ஆகியோர் கொண்ட தூதுக்கோஷ்டி ஒன்று புது டில்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பின ரான அ.இ.அ.தி.மு.கவின் பி.ஜே.நாராயணனும் மாநில அமைச்சர்களும் இணைந்து பிரதமர் பி.வி.நரசிம்மராவை புதுடில்லியில் நேற்று முன் தினம் நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தி யுள்ளனர்.

இந்தப் பேச்சுக்களின் போது மத்திய அரசின் இராணுவ அணிகள் தமிழ்நாட்டிற் கென அனுப்பப்படவில்லை என்றும் கேரள மாநிலத்தின் திருவனந்தபுரம் செல்லும் வழியிலேயே அவை தமிழக நகரமான திருச்சிராப்பள்ளியில் தங்கி இருப்பதாகவும் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் தெரிவுபடுத்தியிருப்பதாகவும் செய்திகள் தெரிக்கின்றன.

இதேவேளை இந்தச் சந்திப்பின் போது இன்று நடைபெற இருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் அ.இ.அ.தி.மு.க அரசுக்கு சார்பாகவே வாக்களிக்கும் என்றும் தூதுக்குழுவினர் பிரதமரிடம் எடுத்துக்கூறியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திரா காங்கிரஸிற்கும் இடையிலான கூட்டணியை வலுப்படுத்த வேண்டுமென்ற ஆவலைப் பிரதமர் வெளியிட்டதாகவும், திருச்சிராப்பள்ளியில் இராணுவ அணி இறக்கப்பட்டிருப்பதற்கும் தமிழ்நாட்டு விவகாரங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெளிவுபடுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

உண்ணாவிரதிகள்மீது தாக்கு தி. மு. க. கண்டனம்

(சென்னை)

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டபோது போலிசார் தலையிடாமல் இருந்தார்கள் என்று திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு. கருணாநிதி விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இது கண்டனத்திற்குரியது என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் நல்ல கண்ணுவிடுத்துள்ளசெய்தியில் ஜனதாதளத் தலைவர்கள் தாக்கப்பட்டது ஜனநாயக விரோதச் செயல் என்று கண்டித்திருக்கிறார். ஆளும் கட்சியான அண்ணா தி.மு.க ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தி நடத்தும் அறப் போராட்டத்தை அராஜக முறையில் குலைக்கிறார்கள் என்றும், பொலிசார் கடமையில் இருந்து தவறி விட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு நல்லாட்சி இயக்கமும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தாக்கப்பட்டதை கண்டித்துள்ளது.

தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு

-வாழப்பாடி

(சென்னை)

தமிழ்நாட்டில் தற்பொழுது சட்டம் ஒழுங்கு சீர் குலைந் துள்ளதாகவும் மீண்டும் வன் முறையும் தோன்றியுள்ளதாகவும் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் பாதுகாப்பு மாநில அரசின் பொறுப்பு

(டில்லி)

அலுவலகத்திற்கு வெளியே சென்று பணியாற்றும் பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க வேண்டியது மாநில அரசின் பொறுப்பாகும் என்று மத்திய அரசு கூட்டிக்காட்டிக் கூறியுள்ளது. மேலும் இத்தகைய பணிகளில் ஈடுபடும் பத்திரிகையாளர்களுக்கும் நஷ்ட ஈடு சட்டத்தின் இரண்டாவது அட்டவணை பொருந்தும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

அசம்பாவிதங்களை விசாரிக்க விசாரணைக்கமிஷன் வேண்டும்

– பாரதிய ஜனதா கோரிக்கை

(டில்லி)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களைவிசாரிக்கவிசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருப்பதைபோல ஏனைய மாநிலங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் பற்றியும் விசாரணைக்கமிஷன் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பாரதிய ஜனதாக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

புதுடில்லியில், செய்தியாளர்களிடம் பேசிய கட்சிப் பிரதிநிதி ஒருவர் மேலும் கூறுகையில்; சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்கள். இந்துக் கோவில்களின் புனரமைப்புப்பற்றி மத்திய அரசு தனது நிலையை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கவனிக்க

'இன்றைய சூழ்நிலையில் நிலவும் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்' என்ற தலையங்கத்தின் கீழ் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி தவிர்க்கமுடியாத காரணங்களினால் இன்று வெளியிடப்படவில்லை. நாளை முதல் அக்கட்டுரை மீண்டும் தொடர்ச்சியாக வெளிவரும்.

மனிதப் படுகொலைகளற்ற ஆண்டாக மலரட்டும்

- திருமதி சிறிமாவோ

(கொழும்பு)

"அடுத்த ஆண்டு மனிதப் படுகொலைகள் அற்ற ஆண்டாக மலரட்டும்" இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

இவ் ஆண்டிற்கான பாராளுமன்றத்தின் இறுதிக் கூட்டமான மேற்படி கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும் போது நாட்டு மக்கள் அனைவருக்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் உதயமாகும் புதிய ஆண்டு இவ்வாறான திட்டமிட்ட மனிதப் படுகொலைகள் எதுவுமற்ற ஆண்டாக அமையவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த நாட்டில் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் திட்டமிட்ட படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். உதயமாகும் புதிய ஆண்டு இவ்வாறான திட்டமிட்ட மனிதப் படுகொலைகள் எதுவுமற்ற ஆண்டாக அமையவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

போஷாக்கின்மையால் 8லட்சம் குழந்தைகள் பாதிப்பு

- யுனிசெவ் அறிக்கையில் தகவல்

சிறிலங்காவில் இருக்கும் குழந்தைகளில் எட்டுலட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையுடைய குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் சேமான யுனிசெவ் அமைப்பின் வருடாந்த அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது; சிறிலங்காவில் இருப்பதாக மதிப்பிடப் படும் 40 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளை எடுத்துக்கொண்டால் இது ஏறத்தாழ முப்பத்தைந்து சதவிகிதமானதாகும் எனவும், பாடசாலை செல்லும் பருவத்திற்கு முன்னான இக்குழந்தைகளின் போஷாக்கின்மை எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாமெனவும் கூறப்படுகிறது

இதேவேளை குறைந்தசெலவுடன் வாழ்க்கையை ஓட்டும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளைமேற்கொள்வதற்கு யுனிசெவ் 25 பில்லியன் டாலர் செலவிலான திட்டமொன்றை தீட்டியிருப்பதாகவும், குழந்தைப்பராயத்திலான நோய்களை கட்டுப்படுத்தல், போஷாக்கின்மையைக் குறைத்தல், சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரவசதிவழங்கல், குடும்பக் கட்டுப்பாட்டு முறையை அமுலாக்குவதைத் தூண்டுதல் என்பனவும் இடம் பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் போஷாக்கின்மை காரணமாக நோய்வாய்ப்படுதலும், கல்வியறிவின்மை பரவலும் வாய்ப்பு ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இன்றைய எமது தேவை அபிவிருத்தியும், சமாதானமும்

– ரொனி டிமெல்

[கொழும்பு]

இன்று எமக்குத் தேவைப்படுவது சமாதானமும், அபிவிருத்தியும், நல்லெண்ணமுமாகும். வடக்கு - கிழக்கில் யுத்தம் நடைபெறுவதைச் சுமார் பார்த்துக் கொண்டிருப்பதால் பயன் ஏற்படாது என்று முன்னாள் நிதியமைச்சர் ரொனி டிமெல்கூறினார்.

நான்கு வருடங்களின் பின்னர் நாடு திரும்பியிருக்கும் ரொனி, தனது கொள்ளுப்பிட்டி இல்லத்தில் ஆதரவாளர் மத்தியில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

நாட்டில் நல்லெண்ணம் ஏற்படுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்றார்.

பின்னர் தனது இல்லத்தில் செய்தியாளருக்கு அளித்த பேட்டியொன்றில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, அமைதியைக் காண உங்களின் யோசனைகள் என்ன என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர்;

இது குறித்து நான் மக்கள், பௌத்த மதத் தலைவர்கள், நாட்டுத் தலைவர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இதற்கான பதிலைக் கூற முடியும். அவர்களுடன் பேச்சுவார்த்தை

சினையைத் தீர்த்து வைத்த 'தேசியத் தலைவர்' என்ற பெயருடன் தேர்தலை எதிர்கொள்ளலாம் என்றே திரு. பிரேமதாசா திட்டமிட்டிருந்தார். இதனால் போருக்கான காலக் கெடுவையும், அரசியல் தீர்விற்கான காலக் கெடுவையும் அரசாங்கம் விதித்திருந்தது. ஆனால், அவர் எதிர்பார்த்த மாதிரிவடக்கு கிழக்குப்போர் அவருக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை.

மாறாக, தெற்கில் அரசியல் சூழ்நிலை, திரு. பிரேமதாசாவிற்கு கடந்த வருடத்தை விட இவ் வருடத்தில் பெரும் சாதகமான நிலையில் உள்ளது. கடந்த வருடம், பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட குற்றவிசாரணை கோரும் பிரேரணையும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் திரு. பிரேமதாசாவிற்கு எதிரான ஓர் அரசியல் சூழ்நிலையை உருவாக்கியிருந்தது.

ஆனால், இவ்வருடத்தில் நிலைமைமுற்றாகமாறியுள்ளது என்றே கொள்ளலாம். எதிர்க்கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்வதுடன், மற்றைய எதிர்க்கட்சிகளுடனும் முரண்பாட்டைக் கொண்டவையாக உள்ளன. இக்கட்சிகள் ,நாட்டில் இடம் பெறும் அநீதிகளுக்குக் கூட ஒன்றாக குரல் கொடுக்க முடியாத அவல நிலையில் உள்ளன.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியோ தனது மூன்னைய திட்டம் தோல்வி அடைந்து விட்டாலும் தேர்தலுக்கென புதிய திட்டத்தை வகுத்துக் கொள்ளக் கூடியநிலையில் உள்ளது அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் பலவீனத்தை நன்கு புரிந்து கொண்டதோடு, தேர்தல் ஆண்டு என்ற ரீதியில் 1993ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தையும் வகுத்துக் கொண்டது. 30 வித சம்பள அதிகரிப்பை அரச ஊழியருக்கு வழங்கியுள்ளதோடு, புதிய திட்டங்கள் மூலம் பெரும் எண்ணிக்கையானோருக்கு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதன் பிரகாரம் 200 ஆடைதயாரிப்புத் தொழிற்சாலையில் ஓர் இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பும், வேலையற்றுள்ள 7000 பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது. அத்தோடு, தேர்தலுக்கான சூழ் நிலையை உருவாக்கும் பொருட்டு, அரசு கட்டுப்பாட்டிலுள்ள வெகுசனத் தொடர்பு சாதனங்களையும் முழுமையாகவும் பயன் படுத்தி வருகின்றது.

இந் நிலையில், வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கும், தேர்தலுக்கும் இடையில் தொடர்பைக் குறைத்து விடுவதில் பிரேமதாசா அரசு தீவிர அக்கறை காட்டுவதாகவும் உள்ளது. அதாவது, தேர்தலுக்காக அரசியல் தீர்வு ஒன்றை முன் வைக்காமல், போரை ஒரு புறத்தில் நடத்திய வண்ணமே மறுபுறத்தில் தேர்தலை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக ஊகிக்க முடிகின்றது. இதற்கு தமக்குள் குத்து வெட்டிற்கு உள்ளாகியுள்ள எதிர்க்கட்சிகளின் பொறுப்பற்ற அதிகாரப் போட்டியே காரணமாகும் என்பதில் கேள்விக்கே இடமில்லை.

என்றும், பொலிசார் கடமையில் இருந்து தவறி விட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு நல்லாட்சி இயக்

அசம்பாவிதங்களை விசாரிக்க விசாரணைக்கமிஷன் வேண்டும்

– பாரதிய ஜனதா கோரிக்கை

(டில்லி)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களைவிசாரிக்கவிசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருப்பதைபோல ஏனைய மாநிலங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் பற்றியும் விசாரணைக்கமிஷன் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பாரதிய ஜனதாக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

புதுடில்லியில், செய்தியாளர்களிடம் பேசிய கட்சிப் பிரதிநிதி ஒருவர் மேலும் கூறுகையில்; சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்கள், இந்துக் கோவில்களின் புனரமைப்புப்பற்றிமத்திய அரசு தனது நிலையை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வேண்டியது மாநில அரசின் பொறுப்பாகும் என்று மத்திய அரசு சுட்டிக்காட்டிக் கூறியுள்ளது. மேலும் இத்த

பொருந்தும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

கவனிக்க

'இன்றைய சூழ்நிலையில் நிலவும் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்' என்ற தலையங்கத்தின் கீழ் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி தவிர்க்கமுடியாத காரணங்களினால் இன்று வெளியிடப்படவில்லை. நாளை முதல் அக்கட்டுரை மீண்டும் தொடர்ச்சியாக வெளிவரும்.

அமெ. பாதுகாப்பில் சென்ற உணவுபொருள்கள்கொள்ளை

(மொகாடிஷ்யு)

சோமாலியாவின் பட்டினியால் வாடும் கிராமங்களுக்கு அமெரிக்க மற்றும் பிரெஞ்சுத் துருப்புக்களின் உதவியுடன் எடுத்துச் செல்லப்பட்ட உணவுப்பொருள்கள் ஆயுத பாணிகளால் அபகரித்துச் செல்லப் பட்டிருப்பதாக கூறப்படுகிறது. கடந்த வியாழனன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் மூலம் ஐக்கிய நாடுகளின் படையின் பணி மேலும்சிரமத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மொகாடிஷ்யு நகரிலிருந்து சுமார் நூற்றைம்பது மைல் தொலைவில் இருக்கும் மரண நகரமான பைடொவாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட உணவுப் பொருள்களே இவ்விதம் கொள்ளையிடப் பட்டவையாகும்.

இதேவேளை அயர்லாந்து நாட்டின் உதவி வழங்கும் அமைப்புகளில் ஒன்றின் பிரதிநிதியாக சோமாலியாவில் கடமையாற்றும் மார்க் முலென் கூறுகையில்; ''குறைந்த பட்

சம் ஒரு மில்லியன் துருப்பு களை சோமாலியாவில் தரையிறக்கினால் தான் பட்டினியால் வாடும் மக்களின் வாயில் உணவுப் பொருட்களை சேர்க்க முடியும்'' என்று தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில்

அரசியலில் ஈடுபட்ட ஜெனரல் பதவி நீக்கம்

(கேப்டவுண்)

தென் ஆபிரிக்காவில் ஆறு இராணுவ ஜெனரல்கள் அரசியலில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டை அடுத்து அவர்களை ஜனாதிபதி டிகிளார்க் பதவி நீக்கம் செய்துள்ளார்.

இராணுவத்தைச் சேர்ந்த

புஷ்ஷின் கொடும்பாவியுடன் அமெரிக்க கொடி எரிப்பு

(டோக்கியோ)

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் கொடும்பாவியும், இரண்டு அமெரிக்கத் தேசியக் கொடிகளும், கடந்த வெள்ளியன்று எரிக்கப்பட்டுள்ளன.

ஜப்பானின் நெற் சந்தையைத் திறந்து விடும்படி அமெரிக்காவும், ஏனைய வெளி நாட்டு சக்திகளும் ஏற்படுத்தி வரும் அழுத்தங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவேவெனக் கூறப்படுகிறது.

ஜப்பான் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டபோதே, இக் கொடும்பாவி எரிப்பும், தேசியக்கொடி எரிப்பும் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

பிரான்சில் கொள்ளை

பிரான்சிலுள்ள வங்கி யொன்றிலிருந்து பதினேழு கோடி பிராங் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது. பிரான்சின் வரலாற்றில் இடம் பெற்ற மிகப்பெரிய வங்கிக் கொள்ளை இது எனக் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு

(ஜெனிவா)

அயோத்தி விவகாரத்தைப் பயன்படுத்தி பாகிஸ்தான் அரசியல் இவாபம் தேட முயல்வதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது. மதத்தின் பெயரால் உள்நாட்டு விவகாரத்தில் குறுக்கிட முயல்வதாக அக் குற்றச்சாட்டில் மேலும் கூறப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி ஹரிகான் இக் குற்றச்சாட்டுக்களை தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு அபிவிருத்தியும், சமாதானமும்

– ரொனி டிமெல்

[கொழும்பு]

இன்று எமக்குத் தேவைப்படுவது சமாதானமும், அபிவிருத்தியும், நல்லெண்ணமுமாகும். வடக்கு - கிழக்கில் யுத்தம் நடைபெறுவதைச் சும்மா பார்த்துக் கொண்டிருப்பதால் பயன் ஏற்படாது என்ற முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் கூறினார்.

நான்கு வருடங்களின் பின்னர் நாடு திரும்பியிருக்கும் ரொனி, தனது கொள்ளுப்பிட்டி இல்லத்தில் ஆதரவாளர் மத்தியில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

நாட்டில் நல்லெண்ணம் நிலவுமாயின் சமாதானத்தை ஏற்படுத்துதோடு, அபிவிருத்தியையும் கட்டி வளர்க்கலாம் என்றார்.

பின்னர் தனது இல்லத்தில் செய்தியாளருக்கு அளித்த பேட்டியொன்றில், இனப் பிரசினைக்குத் தீர்வு கண்டு, அமைதியைக் காண உங்கள் யோசனைகள் என்ன என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர்;

இது குறித்து நான் மக்கள், பௌத்த மதத் தலைவர்கள், நாட்டுத் தலைவர் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னரே இதற்கான பதிலைக் கூற முடியும். அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் இப்போது உடனடியாக எதையும் கூற முடியாது என்றார்.

பெருமளவு ஆயுதங்கள் பொலிசார் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தென்பகுதிக் கொள்ளைச் சம்பவங்களில் பயன்படுத்தப்பட்ட பெருந்தொகையான நவீனரக துப்பாக்கிகள் பொலிசாரால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது

தென்பகுதியில் கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வரும் தேடுதல்களின் போதே இவ் ஆயுதங்களை பொலிசார் மீட்டுள்ளனர். ரி-56ரகத் துப்பாக்கிகளே இவ்வாறு பெருமளவில் மீட்கப்பட்டிருக்கிறது என்று கொழும்பு சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

மேற்படி ஆயுதங்கள் சிறிலங்கா ஆயுதப்படைகளில் இருந்து தப்பியோடிய படையினரது என்றும்அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கிறது.

பெலிஅத்த என்ற கிராமத்தில் உள்ள வீடொன்றில் இருந்தே இவ் ஆயுதங்களை பொலிசார் மீட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி வீடு இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இராணுவ வீரர் ஒருவரின் வீடு என்றும் தெரிய வருகிறது.

திருமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்கள்?

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டத்தில் பதினொரு பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்பட்டு, பதினொரு பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட இருப்பதாக தெரியவருகிறது. இதற்கான முன்னோடி நடவடிக்கையாக திருக்கோணமலை நகர உதவி அரசாங்க அதிபர் செயலகத்தின் பெயர் பலகை கழற்றப்போது பிரதேச செயலகம் என்று மாற்றப்பட்டிருப்பதாகவும் திருக்கோணமலை நகரம் கிண்ணியா, தம்பலகமம், கந்தளாய், சேருவில, வெருகல், மூதூர், கோமரங்கடவல, மொரவேவ, பதவிசிறிபுர, குச்சவெளி பிரதேசங்களிற்கான பிரதேச செயலாளர் நியமிக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஐ. தே. க. மாநாட்டில் ஜேர்மனியின் பாராளுமன்ற உறுப்பினர்கள்

கொழும்புசுகததாச விளையாட்டரங்கில் தற்சமயம் நடந்து வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முப்பதாண்டாவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜேர்மன் பாராளுமன்றத்தின் மூன்று உறுப்பினர்கள் தற்சமயம் கொழும்பு வந்துள்ளனர். பீட்டர் கெட்டில்மான், டங்வட்புவிற், ருடோல்ப் ஸ்புருங் ஆகிய மூன்று ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜேர்மனியின் ஆளுங்கட்சியை சேர்ந்தவர்களாகும்.

ஈழநாதம்

நெல்லச் சேனையிலிருந்த

நூற்றுக் கணக்கான அகதிகளை இராணுவம் விரட்டியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து நெல்லச் சேனைப் பகுதியில் வசித்து வந்த பல நூற்றுக் கணக்கான தமிழ் அகதிகளை சிறிலங்காப் பாதுகாப்புப் படையினர் அப் பகுதிகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றியுள்ளனர்.

மட்டக்களப்பு - அம்பாறை எல்லைக் கிராமமான மாலையர்கட்டுப் பகுதியைச் சேர்ந்த இத்தமிழர்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக மேற்படி பகுதியில் தற்காலிக கொட்டில்கள் அமைத்து தங்கியிருந்தனர்.

தற்பொழுது பாதுகாப்புக் காரணங்கள் கூறப்பட்டு இந்த அகதிகள் இங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதனால் இவர்கள் தமது தற்காலிக கொட்டில்களையும் கைவிட்டு மண்டூருக்குச் சென்றுள்ளனர். மண்டூரில் உள்ள பாடசாலைகளில் போதிய இருப்பிட வசதிகள் இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

அதேவேளை மண்டூரிலும் இரவில் பொதுமக்கள் நடமாடுவதற்கு பாதுகாப்புப் படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

கொழும்பு சரஸ்வதி மண்டபம்

அகதிமுகாமை மூடிவிட அரசாங்கம் யோசனை

(கொழும்பு)

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அகதிகளாகத் தங்கியிருக்கும் வடக்கு கிழக்குத் தமிழர்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தவேண்டிய நடவடிக்கைகளுக்கான சாத்தியம் குறித்து புனர்வாழ்வு அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

இதன் முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தில் மேற்படி மீளக்குடியமர்த்துவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து அறிந்து கொள்வதற்காக புனர்வாழ்வு அமைச்சு இப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறது.

இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மேற்படி மீளக்குடியமர்த்துவதற்கான சாத்தியம் காணப்படும் பட்சத்தில் அப்பகுதிகளைச் சேர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

கனேடியத் தூதுவர் மட்டு. விஜயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அடுத்த மாதம் நடுப் பகுதியில் கனேடியத் தூதுவர் விஜயம் செய்யவுள்ளார்.

விஜயத்தின் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகளை அவர் அறிந்துகொள்வார்.

மட்டக்களப்பு - திருமலை ஆயர் அதிவண. யோசவ் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும், மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கனேடியத் தூதுவருடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே இவரது மட்டக்களப்புக்கான விஜயம் குறித்து முடிவெடுக்கப்பட்டது.

மேற்படி பேச்சுவார்த்தையின் போது மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த அகதிகள் நிலைமை குறித்தும், விதவைகள், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் வறிய மாணவர்களது நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப் பட்டதாகத் தெரிய வருகிறது.

நானாட்டானில்

இருந்து கவசவாகனங்கள் சகிதம் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த இடம் நோக்கிப் புறப்பட்ட இராணுவத் தினரையும் புலிகள் வழி மடக்கித் தாக்கினர்.

இவர்களில் உயிலங்குளம் போது வழிமறித்துத் தாக்கப் பட்டனர்.

வெளிவந்துவிட்டது...

சிரித்திரன்

கார்த்திகை - மார்கழி இதழ்

விலை ரூபா 15/-

அன்பர்கள் திரிக்கு முந்துங்கள்!

பயிற்சி வகுப்பு

1993 ஆம் ஆண்டு வாழ்க்கைத்திறன் கல்வியை ஆரம்பிக்கும் பாடசாலை அதிபர் ஆசிரியருக்கான பயிற்சிவகுப்பு மாவட்ட நிலையில் யாழ்கனகரெத்தினம் ம.ம.வி.யில் காலை 8.30 - 4.30 மணி வரை நேற்று ஆரம்பமாகிய இந்த வகுப்பு 21, 22, 23, 24, திகதிகளில் நடைபெறும்.

இப்பயிற்சியைப் பெற விண்ணப்பித்தவர்கள் வராத பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நாவற்குழியில் முதலை

(வேலணை)

நேற்று முன்தினம் இரவு நாவற்குழியில் நீர்ப்பரப்பில் 6 அடி நீளம் கொண்ட முதலை ஒன்று பிடிக்கப்பட்டது.

அன்றைய தினம் இரவு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீன் பிடி வலைகளை கடலில் விரித்து வைத்திருந்த சமயம் இந்த முதலை எதிர்பாராத விதமாக வலையில் அகப்பட்டுக் கொண்டது முதலைகொல்லப் பட்ட நிலையில் நாவற்குழி பாலத்திற்கு அருகாமையில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. [14]

மீனவக் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம்

(கொழும்பு)

வடகிழக்கில் நடைபெற்று வரும் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சென்று கொழும்பில் தங்கியிருக்கும் மீனவர் குடும்பங்களுக்கு மீண்டும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

கொழும்பில் சுமார் 1200 மீனவர் குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. இவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த மீனவர் நிவாரணம் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது இந்த நிவாரண விநியோகத்தை மீண்டும் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

புலிகள்

மே 14 ஆம் திகதி முதல் இந்திய அரசு தடை விதித்தது தெரிந்ததே.

தமிழகத்தின் சில பகுதிகளையும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தையும் இணைந்த தாயகம் ஒன்றை அமைக்க விடுதலைப் புலிகள் முயற்சித்ததாகவும், இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், மத்திய, மாநில அரசுகள் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்த தத்தம் அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

ஜனசவியவை நிறுத்தவே ஆடைத் தொழிற்சாலை

-பந்துல குணவர்த்தன

[கொழும்பு]

ஜனசவிய திட்டத்தை நிறுத்தவே சிறிலங்கா அரசு துரிதமாக ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவிவருவதாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனா குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; சிறிலங்கா அரசு வழங்கி வரும் மானியங்களை நிறுத்துப்படி உலகவங்கி அரசிற்கு வழங்கிய அறிவுறுத்தல்களுக்கிணங்க இவ்வருட இறுதிக்குள் ஜனசவிய திட்டத்தை அரசு நிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுள்ளது இதற்காகவே அரசு துரிதகெதியில் ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவிவருகிறது. இத்தொழிற் சாலைகளில் ஜனசவிய பெறுவோருக்கு மட்டுமே வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதன்மூலம் இவர்களுக்கான ஜனசவிய கொடுப்பனவை அரசு நிறுத்திவருகிறது.

சிறிலங்கா ஜனாதிபதி அறிவித்தது போன்று இவ்வருட இறுதிக்குள் 200 ஆடைத் தொழிற்சாலைகளை அவர்களால் நிறுவமுடியாது. அவ்வாறு அரசு நிறுவினால் நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வேன்'' எனவும் அவர் தெரிவித்தார்.

2 பீப்பா டீசல் திருட்டு

சுமார் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான டீசலை முத்திரைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் இருந்து இனம் தெரியாத குழுவினர் திருடிக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மேற்படி வீட்டின் வளவினுள் வைக்கப்பட்டிருந்த சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான இரண்டு பரல் டீசலை இனம் தெரியாத கும்பல் ஒன்று உட்புகுந்து மிகவும் சாதுரியமாக உருட்டிக் கொண்டுவந்து வெளியில் வைத்துவிட்டு பின்னர் லொறி ஒன்றில் ஏற்றிச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக டீசல் உரிமையாளர்கள் தமிழ் காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என தெரியவருகின்றது.

கடற்படை

இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் பயணம் செய்ததாகவும் எனினும் கடற்படையைச் சேர்ந்த மாலுமியான ஒருவரைத் தவிர மற்றையோர் நீந்திக் கரை சேர்ந்ததாகவும் கூறப்படுகிறது.

பல்கலை

இதற்கிடையில் துணைவேந்தர் பல்கலைக்கழக ஆசிரியர்கள் நிர்வாகக் கூட்டமையிலிருந்து விலகுவதற்கான கடிதங்களைத் தமது துணைவேந்தரிடம் கையளித்துள்ளனர்.

மணலாற்றுப் பகுதியில் பெண் ஊர்காவல்படை

(மணலாறு)

மணலாற்றுப் பகுதிகளில் நடைபெற்று வரும் அத்துமீறிய சிங்களக் குடியேற்ற பகுதிகளில் பெண்கள் ஊர்காவல் படையை சிங்கள அரசு அமைத்துள்ளது

பெண்கள் ஊர்காவல்படை மணலாற்றில் முதல் தடவையாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மணலாற்றில் சிறிலங்கா அரசின் அத்துமீறிய குடியேற்ற பகுதிகளின் எல்லைப் புறங்களில் ஆண் ஊர்காவல் படையினரும் உள்பிரதேசங்களில் பெண் ஊர்காவல் படையினரும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ் ஊர்காவல் படையினருக்கு 303 ரக துப்பாக்கிகளும் எஸ் எல். ஆர் ரக துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மரண அறிவித்தல்கள்

இரகுநாதபிள்ளை துரைரெத்தினம்

(கணக்கர், வல்வெட்டித்துறை, வேம்படி)

வேம்படி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கணக்கர் என்றழைக்கப்படும் இரகுநாதபிள்ளை துரைரெத்தினம் 20.12.92 அன்று காலமாகிவிட்டார்.

இவர் இராஜேஸ்வரி (சமூக சேவை உத்தியோகத்தர், கைதடி அரசாங்க முதியோர் இல்லம் யின் அன்புக் கணவரும் பொன்னரசி (ஆசிரியை, புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்), மலர்அரசி (லிகிதர், விவசாயத் திணைக்களம், புதுக்குடியிருப்பு), இராசரகுநாத்(மாவீரர் மாறன்), சந்திரநாதி (மாணவன், முதலாம்குமாரசாமி வித்தியாலயம், கைதடி) ஆகியோரின் அருமைத்தந்தையும், காலஞ்சென்ற ரகுநாதபிள்ளை விசாலாட்சியின் அன்பு மகனும், திருமதி துரைசிங்கம் ஜெயவிஸ்வராணியின் அன்புச் சகோதரனுமாவார்.

தகவல்:

[3828] து. இராஜேஸ்வரி (மனைவி)

திருமதி றோமான் யோசேப்பின்

காலஞ்சென்ற இறப்பியேல் மனவல்மாறிறெற் தம்பதியின் புதல்வியும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் றோமானின் அன்பு மனைவியும், யூடா இம்மகுலேற் கிறிஸ்ரியன் (பிரான்ஸ்), அன்ரன், இராயப்பு லூர்த்துநாயகி, இக்பேட்; ஒலிவர் [மாநகரசபை], அன்ரனி[கிராமசேவை அலுவலர் J/69], பீலிக்ஸ் ஜெயசீலி, ஸ்ரனிஸ்லோஸ் [நோர்வே], டயஸ் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாருமான றோமான் யோசேப்பின் காலமாகி விட்டார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சுமாதா சேமக்காலைக்கு ஒழ்வடக்கு திற்காக (21-12-92) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

10, அடப்பன் வீதி,
குருநகர்.

தகவல்:
றோமான் அன்ரனி
(திருமலை அலுவலர்)

கா புனர்வாழ்வு அமைச்சு இப்பகுதி உதவி அரசாங்கம் அதிபர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறது.

இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மேற்படி மீளக் குடியமர்த்துவதற்கான சாத்தியம் காணப்படும் பட்சத்தில் அப்பகுதிகளைச் சேர்ந்தவர்

களுக்கான விஜயம் குறித்து முடிவெடுக்கப்பட்டது.

மேற்படி பேச்சுவார்த்தையின் போது மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த அகதிகள் நிலைமை குறித்தும், விதவைகள், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் வறிய மாணவர்களது நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப் பட்டதாகத் தெரிய வருகிறது.

நானாட்டானில்

இருந்து கவசவாகனங்கள் சகிதம் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த இடம் நோக்கிப் புறப்பட்ட இராணுவத்தினரையும் புலிகள் வழிமடக்கித் தாக்கினர்.

இவர்களில் உயிலங்குளம் இராணுவ முகாமிலிருந்து மூன்று கவச வாகனங்கள் சகிதம் புறப்பட்ட இராணுவத்தினர் வட்டுபித்தான் மடு, வஞ்சியன்குளம் ஊடாக வந்த

போது வழிமறித்துத் தாக்கப் பட்டனர்.

இதேவேளை வழிமறித்து நடத்தப்பட்ட தாக்குதலின் போது இராணுவதரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரிய வரவில்லை.

புலிகள்

மே 14 ஆம் திகதி முதல் இந்திய அரசு தடை விதித்தது தெரிந்ததே.

தமிழகத்தின் சில பகுதிகளையும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தையும் இணைந்த தாயகம் ஒன்றை அமைக்க விடுதலைப் புலிகள் முயற்சித்ததாகவும், இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், மத்திய, மாநில அரசுகள் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்த தத்தம் அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

கடற்படை

இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் பயணம் செய்ததாக வுமெனினும் கடற்படையைச் சேர்ந்த மாலுமியான ஒருவரைத் தவிர மற்றையோர் நீந்திக் கரை சேர்ந்ததாகவும் கூறப்படுகிறது.

பல்கலை

இதற்கிடையில் நுகுனை பல்கலைக்கழக ஆசிரியர்கள் நிர்வாகத் துறையிலிருந்து விலகுவதற்கான கடிதங்களைத் தமது துணை வேந்தரிடம் கையளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்கள் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் உயர் கல்வி அமைச்சர் ஹமீட்டுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளின் போது இருபது விகிதப் படி உயர்வு வழங்கும்படி தான் அரசுக்குப் பரிந்துரைக்கப் போவதாக ஹமீட் கூறினார்.

பல்கலைக் கழகங்கள் மான்யக் குழுவின் தலைவர் பேராசிரியர் அலிகாரை முப்பது சதவிகிதப்படி உயர்வு வழங்கலாம் என்று முன்பு கூறிய ஆலோசனை பேச்சுவார்த்தையில் இடம்பெறவில்லை என்றும் பல்கலைக்கழகங்கள் ஆசிரியர் சங்க சம்மேளனப் பேச்சாளர் தெரிவித்தார்

பேச்சுவார்த்தைகளின் போது சம்மேளனத்தின் சார்பில் கலந்து கொண்ட குழுவிற்கு அதன் தலைவர் கலாநிதி நவின் டி சிவாதல்லை தாங்கினார் பல்கலைக்கழகங்கள் மானியக் குழுவின் தலைவர் பேராசிரியர் அலிகாராவும் பேச்சு வார்த்தையின் போது சமுகமளித்திருந்தார் அடிப்படைச் சம்பளத்தில் இருபதுவிகிதப் படி அதிகரிப்பு தமக்குக் கட்டுபடியாகாது என்ற ஆசிரியர்கள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது

திரிசங்கு

பிரேமதாசா விரும்பவில்லை. எனவே ரொனி டி மெல்லை ஒரு மேடைப் பேச்சாளராகப் பயன்படுத்த மட்டுமே ப்ரேமதாசா விரும்புவதாகவும் தெரியவருகின்றது.

எனினும் சுதந்திரக்கட்சியிலிருந்து அழைப்புக் கிடைக்கும் பட்சத்தில் அக்கட்சியில் இணைந்துகொள்ள ரொனி தயாராக இருப்பதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஜனதிபத்திரிகை ஆசிரியர் வீனி எதிர்பாகாட்ப. பி. லிக்குத தெரிவித்தார்

வெளிவந்துவிட்டது...

சிரித்திரன்

கார்த்திகை - மார்கழி இதழ்

விலை ரூபா 15/-

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

கிடைக்குமிடங்கள் .....

பூபாலசிங்கம் புத்தகசாலை - பஸ்நிலையம், யாழ்ப்பாணம்

தமிழ்த்தாய் புத்தகசாலை - மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்

மொடேர்ண் புத்தகசாலை - பஸ்நிலையம், நெல்லியடி

கலைச்சோலை - வல வெட்டித்துறை

தென்மராட்சி கடைகளிலும் கிடைக்கும்.

❋ ''மகுடி'' கேள்வி பதில்கள்

❋ சிரித்திரன் சிக்கல்போட்டி II

பெறுமதி மிக்க பரிசில்கள் .....

▣ கருப்பறவையின்...'மாறும் காலமும் மாறாத நினைவுகளும்'

▣ GOULD இன் குறும்பு

▣ சிரித்திரன் அகராதி, முன்முறுவல், பின்சிரிப்பு

▣ துணுக்குகள், முதலிய அம்சங்களுடன்

வெளிவந்துவிட்டது.

''செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்''

(சி-5621)

5-ம்வருட நினைவலைகள்

நாட்டுப்பற்றாளர்

நாகரட்ணம் சிவசங்கர்

அவதாரமாகி .. 27 - 11 - 1958

ஆத்மாவான 21 - 12 - 1987

மகாஜன மாதாவின்
மாண்புறு மாணிக்கமே!
மணவாழ்வில் அடிவைத்து
அரையாண்டை காணமுன்னர்
கண்காணா தூரத்தில்
உன்உயிரை பறிப்பதற்கு
பாதகர்கள் துணிந்தனரே!
கிறாஸ்கொப்பேர்ஸ் கழகமது
கிறிக்கெட்டில் பெயர் பொறிக்க
காரணராய் அமைந்த நின்னை
காணாது தவிக்கும் நாங்கள்
ஐந்தாண்டை கண்டுவிடோம்.
துயர்தாள முடியாமல்
தவிக்கின்றோம் துடிக்கின்றோம்.

(சி-5623)

தெல்லிப்பழை கிறாஸ்கொப்பேர்ஸ் நண்பர்கள்

31-ம்நாள் கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 17-02-1935

விண்ணில் 21-11-1992

இரத்தினசபாபதி சோமநாதர்

(பூசாரியார்)

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
ஈழத்துச் சிதம்பர சவுந்தராம் பிகை
சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின்
பாதார விந்தங்களைப் பிரார்த்திப்போமாக!

அன்னாரின் மறைவால் துயருறும்

வழக்கப் பரை காரைநகர் இளைஞர்கள்

(சி-6622)

உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

20.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7169

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9404, 27-2107, 42-9345, 26-6320, 27-0802,
27-9779, 27-9825, 42-1464, 26-1609, 27-2056
41-5175, 40-2583, 26-5560, 42-0526, 26-0423,
27-9365, 41-9995, 26-7252, 24-9390.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-7993, 26-0355, 26-3962, 28-0429, 41-9659,
26-1376, 24-5964, 27-9030, 24-1685, 24-1127,
27-0089, 24-5955, 24-9549, 40-1617, 42-6452.

தகவல்:
[3828] து. இராஜேஸ்வரி (மனைவி)

திருமதி றோமான் யோசேப்பின்

காலஞ்சென்ற இறப்பியேல் மனவல்மாகிறெற் தம்பதி ன் புதல்வியும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் றோமானின் அன்பு மனைவியும், யூடா இம்மகுலேற் கிறிஸ்ரியன் (பிரான்ஸ்), அன்ரன், இராயப்பு லூர்த்துநாயகி, இக்பேட் ஒலிவர் [மாநகரசபை], அன்ரனி [கிராமசேவை அலுவலர் J/69], பீலிக்ஸ் ஜெயசீலி, ஸ்ரனிஸ்லோஸ் [நோர்வே], டயஸ் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாருமான றோமான் யோசேப்பின் காலமாகி விட்டார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சியோதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக (21 - 12 - 92) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை ஏற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

10, அடப்பன் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
[3830]

தகவல்:
றோமான் அன்ரனி
(கிராமசேவை அலுவலர்)
குருநகர்.

சுப்பிரமணியம் காங்கேசு

(வேலணை கிழக்கு - பிரபல விவசாயி)

வேலணை கிழக்கு அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் கிழக்கு ஆடியபாதம் வீதியில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் காங்கேசு 20 - 12 - 1992 ஆம் திகதி சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்து அவர்களின் அன்புக் கணவரும் - காலஞ்சென்றவர்களாகிய சுப்பிரமணியம் - தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தையல்முத்து ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராஜேஸ்வரி (சுவிஸ்), இராஜலெட்சுமி, மகாலெட்சுமி, சிவராசா, தங்கலெட்சுமி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, திருநாவுக்கரசு (சுவிஸ்), தர்மபாலன் (உரிமையாளர் சுந்தரம்ஸ்ரோர்ஸ் மாங்குளம்), கோபாலபிள்ளை, அருட்செல்வி, இராஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சின்னராசா, செல்லத்துரை, மற்றும் இளையபிள்ளையின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் பூமணியின் மைத்துனரும், திருமதி. யோகரெட்ணம் ஸ்ரீகலா (சுவிஸ்), திருமாறன் [சுவிஸ்], றதிகலா [சுவிஸ்] திருவானந்தன் 'சுவிஸ்), தவநிதி (சுவிஸ்), தர்சினி, ராசினி, கஜேந்திரன், கவிதா, ஜெயந்தி, ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயசுதா, ஜெயசங்கர் (ஜேர்மனி), பிரதீபன், மணிதீபன், தவாரதி, சிவகதன், கௌசிகன், றேனுகா (கனடா), தனுசன் [கனடா], ஆகியோரின் அன்புப் பேரனும் நிதர்சன் [சுவிஸ்], நிசாந்தன், [சுவிஸ்], ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21 - 12 - 1992 ஆம் திகதி (இன்று) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
(கொக்குவில் சந்திக்கு அண்மையில்)

தகவல்:
த. சிதம்பரநாதன்
(மருமகன்)
[3829]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.